# 10

*சபை:*

# இதன் ஒருமைப்பாடு

## ஒருமைப்பாடு விளக்கப்பட்டது

1. ***கொரிந்தியர்களிடம் பவுல் கேட்டுக் கொண்ட நான்கு விஷயங்களைக் குறிப்பிடவும் (1 கொரி. 1:10).***
   *ஒருமைப்பாடு எதில் அடங்கியுள்ளது?*
2. ***ஒருமைப்பாட்டின் ஆசீர்வதிக்கப்பட்ட தன்மை பற்றித் தாவீது கூறியது என்ன (சங். 133:1)?***
3. ***"ஒருமைப்பாடு" மற்றும் "ஒன்றியம்" ஆகியவற்றிற்கிடையே வித்தியாசப் படுத்தவும்.***
   - *அ. ஒருமைப்பாடற்ற ஒன்றியத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு தரவும். பல்வேறு நாமகரணக் கூட்டங்களின் ஒன்றியக் கூட்டத்தில் ஒன்றிப்பு உள்ளது, ஆனால் ஒருமைப்பாடு என்பது ஒரு சிறிதே உள்ளது.*
   - *ஆ. இதை இன்னும் விவரிக்கவும். அ, ஆ, இ, ஈ என்ற நாமகரணக் கூட்டங்கள் ஒன்றிப்பான புத்துயிர்ப்பில் நுழைகின்றன. ஐந்நூறு பேர் மனம் மாற்றப் படுகின்றனர். புத்துயிர்ப்புக் கூட்டத்தின் முடிவில் இவர்களில் நானூறு பேர் சமமாக (ஒவ்வொரு நாமகரணக் கூட்டத்திற்கும்) பிரிக்கப்படுகின்றனர். ஏற்கனவே பிரிந்துள்ள சபைகளை இந்தப் புத்துயிர்ப்புக் கூட்டமானது பலப்படுத்தவில்லையா? ஆகையால் ஒன்றிப்புக் கூட்டங்கள் கிறிஸ்தவ ஒருமைப்பாட்டைக் கொண்டு வருமா?*
   - *இ. இந்த மனம்மாறிய ஐந்நூறு பேரில் 100 பேர், இந்தக் கூட்டத்தில் ட எந்த நாமகரண குழுக்களுடனும் சேர்த்துக் கொள்ளப்பட மறுக்கின்றார்கள். இவர்கள் யாராய் இருந்தார்கள்?*

## ஒருமைப்பாடு இருக்க வேண்டியது ஏன்?

1. ***இயேசு எதற்காக ஜெபித்தார் (யோவா. 17:20-22)?***
2. ***கொரிந்தியர்களுக்குப் பவுல் புத்தி கூறியது என்ன (1 கொரி. 1:10)?***
3. ***ஒருமைப்பாட்டைப் பாதுகாத்துப் பராமரிக்க எல்லாரும் எவ்வாறு செயல்பட வேண்டும் (எபே. 4:1-3)?***
4. ***உலகத்தின் மதப் பிரிவுகள் எவ்விதம் தேவன் மீது கயின்மையை உண்டாக்குகின்றன (யோவா. 17:21)?***

5. ***மத உலகின் ஒருமைப்பாடானது ஏராளமான பொருள் செலவை எவ்வாறு குறைத்துப்போடும்?***
6. ***பிரிவினையைப் பவுல் எவ்விதம் கண்டனம் பண்ணினார் (1 கொரி. 1:13; 3:3, 4; ரோமர் 16:17, 18)?***

## *ஒருமைப்பாட்டின் அடிப்படை*

| *அவசியமற்ற இவற்றை நீக்கிப் போடவும்:* | *அவசியமான இவற்றைப் பத்திரப்படுத்தவும்:* |
|---|---|
| *1. பின்வருவன போன்ற போதனைச் சட்ட நூல்கள்*<br>*அ. ஒழுங்கு முறைகள்*<br>*ஆ. விசுவாச அறிக்கை*<br>*இ. கைப்புத்தங்கள்*<br>*ஈ. சட்ட நூல்கள்* | *1. வேதாகமம்* |
| *2. நாமகரணப் பெயர்கள்* | *2. வேதாகமப் பெயர்கள்* |
| *3. நாமகரண சபைகள்* | *3. வேதாகம சபை* |
| *4. நாமகரண ஞானஸ்நானம் வகை, வடிவமைப்பு மற்றும் பெறுபவர்கள்.* | *4. புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானம் செயல், வடிவமைப்பு மற்றும் பெறுபவர்கள்* |

## *முடிவுகள்*

1. ***எல்லா சட்ட நூல்களும் கைப்புத்தகங்களும் அவசியமற்றவை என்று ஒப்புக் கொள்ளப்படுவது எவ்வாறு என்று காண்பிக்கவும்.***
2. ***வேதாகமம் முற்றிலும் அவசியமானதாக உள்ளது என்பதைக் காண்பிக்கவும் (2 தீமோ. 3:16, 17).***
3. ***நாமகரணத்துவப் பெயர்கள் அவசியமற்றவையாய் உள்ளன என்பது எவ்வாறென்று செயல் விளக்கப்படுத்தவும்.***
4. ***இப்பொழுது எல்லாரும் வேதாகமத்தில் காணப்படும் பெயர்களின் மீது எவ்வாறு ஒருமைப்பாட்டுடன் இருக்க முடியும் என்று காண்பிக்கவும்.***
5. ***நாமகரணக் கூட்டங்களால் தரப்படும் ஞானஸ்நானம் தகுதியற்றதாக உள்ளது எவ்வாறு என்று விவரிக்கவும்.***
6. ***தனிப்பட்ட நாமகரணக் கூட்டமாய் உள்ள ஏதொன்றின் அடிப்படையில் கிறிஸ்தவ ஒருமைப்பாடு சாத்தியமாவதில்லை என்பதைச் செயல் விளக்கப்படுத்தவும்.***
7. ***கிறிஸ்து ஜெபித்த ஒருமைப்பாட்டைப் பெறுவதற்கு, நீக்கிப் போடப்பட வேண்டியவை யாவை? வைத்துக் கொள்ளப்பட வேண்டியவை யாவை?***
   ***மேற்கண்ட அட்டவணையைப் படிக்கவும்.***

## பவுலின் செயல்விளக்கம் - கிறிஸ்தவரின் நடைமேடை (எபே. 4:4-6)

1. *ஆராதனை பற்றி, என்ன இருக்க வேண்டும்? ............ஒரே தேவன்*
2. *அதிகாரம் பற்றி, எந்த ஆதாரமூலம் இருக்க வேண்டும்? ..ஒரே கர்த்தர்*
3. *நிறுவன அமைப்பு பற்றி, என்ன இருக்க வேண்டும்? ...ஒரே சரீரம்*
4. *ஜீவனைப் பற்றி, எந்த ஆதாரமூலம் இருக்க வேண்டும்? .ஒரே ஆவி*
5. *போதித்தல் பற்றி, என்ன உபதேசம் இருக்க வேண்டும்? ..ஒரே விசுவாசம்*
6. *நடைமுறை பற்றி, என்ன இருக்க வேண்டும்?..ஒரே ஞானஸ்நானம்*
7. *நோக்கம் பற்றி, என்ன இருக்க வேண்டும்? ...........ஒரே நம்பிக்கை*